O.S.No.157/2021

DW1- வசந்தகுமார் – த/பெ அருணாச்சலம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026

<u>குறுக்கு விசாரணை :</u> (வாதி தரப்பில்)

1. பிராது தபசில் சொத்தின் சர்வே எண் 88/4ல் மொத்தம் 9 ஏர் இடம் உள்ளது என்றால் சரிதான்

2. மொத்த இடத்திற்கு கீழ்புறம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான்

3. மொத்த இடத்திற்கு மேல்புறம் ஆசாரி சமுதாய மக்களின் குடியிருப்பு பகுதி உள்ளது என்றால் சரிதான்.

4. தபசில் சொத்திற்கு தென்புறம் சர்வே எண்.88/18 மற்றும் 88/19 உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5. தபசில் சொத்திற்கு வடபுறம் ராமசாமி மற்றும் கிருஷ்ணன் இடம் உள்ளது என்றால் சரிதான்.

6. மொத்தம் உள்ள 9 ஏர்–ல் மேல்பக்கம் 4 ஏர் இடம் பாகத்தின் படி வாதி தந்தைக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

7. மொத்தம் உள்ள 9 ஏர் இடமும் குமார் மற்றும் பெருமாள் நாடார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த குமார் நான் தான் என்றால் சரிதான்.

8. வாதி எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான்.

9. வாதி சொத்தும் எங்கள் சொத்தும் பாகம் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

10. நானும், வாதியும் சேர்ந்து எந்த சொத்தையும் அனுபவிக்கவில்லை என்றும் தனித்தனியாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

11. என் தகப்பனாருக்கு கிடைத்த சொத்தை நான், என் அம்மா மற்றும் சகோதரரும் 3ம் நபருக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் இல்லை.

12. ராஜாமணி மனைவி பாப்பம்மாள் மற்றும் ராஜாமணி மகன்கள் வசந்தகுமார் மற்றும் சுதன் என்றால் பிரதிவாதிகளாகிய எங்களைத்தான் குறிக்கும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது நாங்கள் மூவரும் கோமதியம்மாளுக்கு 05.11.2008 ம் தேதி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் வா.சாஆ.12 ஆக பி.வா.சா.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

13. என் குடும்பத்தின் மூத்தவர் என் தாயார் என்றால் சரிதான்.

14. என் தாயார் பெயரில் நாளது வரை எந்த பட்டாவும் இல்லை என்றால் சரிதான்.

15. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாதி எனக்கு அனுப்பிய அறிவிப்பிற்கு நான் வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பிற்கு நான் தான் தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 2 வது பத்தியில் சொத்துக்கள் என் தந்தை அருணாச்சலத்திற்கு பாகம் மூலம் கிடைத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

18. வா.சா.ஆ.6 ஆவணத்தில் என் தகப்பனார் காலத்திற்கு பிறகு நானும் என் சகோதரர் சுதனும் சொத்துக்களை முழு உரிமையாளர் நிலையில் அனுபவம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் .

19. மொத்தம் உள்ள 9 ஏர்ஸ்–ல் கீழ்புறம் வடபக்கம் ஒரு தொழுவம் உள்ளது என்றால் சரிதான். தென்பாதியில் ஓட்டு சாய்பு ஒன்று உள்ளது என்றால் சரிதான்.

20. வழக்கு மத்தியில் கீழ்பாதி சொத்தில் வடபாதியில் தென்பக்கம் பார்த்து கடை கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான் கடையின் அஸ்தீவாரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே போடப்பட்டது.

21. கடை கட்டிடத்திற்கு வடபுறம் கேட் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

22. தபசில் சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான்.

23. பிராது 1வது சொத்திற்கு கீழ்பாதியில் சுற்றுச்சுவர் முழுவதும் அமைத்துள்ளேன் என்றால் சரிதான்.

24. வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பிய பின்னர் தான் 2ம் தபசில் சொத்தின் பாதையின் மேல்புறத்தில் கல்சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல பாதையே அங்கு இல்லை.

25. நீதிமன்ற ஆணையர் அறிக்கை விவரம் தெரியும் என்றால் சரிதான்.

26. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் BC என குறிப்பிட்டுள்ள இடத்தில் கல்கட்டிடத்தில் அஸ்திவாரம் போடப்பட்டு அதன் மேல் ஹாலோபிளாக் சுவர் கட்டிடம் கட்டியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

27. ஆணையர் அறிக்கையின் 5வது பத்தியில் BE மற்றும் FC பகுதியில் உள்ள கல்சுவரானது 5 அடி உயரம் உள்ளது எனவும் EF பகுதி 2 அடி உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அனைத்து கல்சுவரும் 5 அடி உயரத்தில் உள்ளது.

28. நான் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

29. EF பகுதிக்கு நேர் எதிராக கேட் உள்ளதாக ஆணையர் அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. இதற்கு என் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

30. 9 ஏர் இடம் முழுவதும் கல்சுவர் கட்டியதாக நான் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விவரம் தவறு என்றால் சரிதான் என் பாக இடத்தில் மட்டுமே கல்சுவர் அமைத்துள்ளேன்.

31. 1ம் தபசில் சொத்திற்கு மேல்புறம் ஆசாரி சமுதாய பகுதியில் காணப்பட்டுள்ள பாதையானது அவர்கள் மட்டும் உபயோகம் செய்யும் பாதை என்றால் சரியல்ல அது பொதுப்பாதை. அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

32. வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

33. வாதி அவர்களது வழக்கில் 1ம் தபசில் சொத்திற்கு மேல்பகுதியில் உள்ள பாதையானது ஆசாரி சமுதாய மக்களுக்கு மட்டும் தனிப்பட்ட பாத்தியப்பட்ட பாதை என குறிப்பிட்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

34. வாதிக்குரிய 1ம் தபசில் சொத்தின் வடபுறமும், தென்புறமும் பாதை இல்லை என்றால் சரியல்ல தென்புறத்தில் பாதை உள்ளது. தென்புறத்தில் உள்ள பாதையை நான் ஆணையரிடம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல காண்பித்தேன்.

35. ஆணையர் அவரது அறிக்கையில் 1ம் தபசில் சொத்திற்கு வடபுறமும், தென்புறமும் பாதை இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

36. என் தகப்பனாருக்கும் வாதிக்கும் பாகம் ஏற்பட்ட காலம் முதலே 1ம் தபசில் சொத்திற்கு 2ம் தபசில் சொத்தின் வழியாகத் தான் வாதி பாதையாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் நான் தற்போது வம்படியாக பாதையை மறித்து கல்சுவர் கட்டி கேட் வைத்து வாதி பாதையை அனுபவம் செய்வதை தடை செய்வதால் வாதி அவர் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

37. பிராது 2ம் தபசில் சொத்தை தவிர 1ம் தபசில் சொத்திற்கு வருவதற்கு வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல.

38. 1ம் தபசில் சொத்தை அனுபவிக்க வாதிக்கு 2ம் தபசில் சொத்து பாதை அவசியமானது என்பதால் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
தென்காசி